23

LIBRARY ... 27 APR 2016 ... SRI LANKA

# கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை.

## இரண்டாம் வருடம் பொதுக்கலைமாணித் தேர்வு 2010 /2011 (வெளிவாரி)

(மார்ச் /ஏப்ரல் 2016) (மீள்பரீட்சை)

## TL 201 தமிழ்மொழியின் இலக்கணம்

**நேரம்: 03 மணித்தியாலங்கள்**

**ஒவ்வொரு பகுதியிலிருந்தும் குறைந்தது இரு வினாக்களையேனும் தெரிவு செய்து எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடை தருக.**

---

### பகுதி – I

1) தமிழ் வரிவடிவம் குறித்து தமிழ் இலக்கண நூல்கள் கூறுவனவற்றைத் தொகுத்துரைத்து, அதில் ஏற்பட்டுள்ள மாற்றங்களையும் வளர்ச்சியையும் விளக்குக.

(20 புள்ளிகள்)

2) அ) முதலெழுத்து – சார்பெழுத்து என்பவற்றை வரையறை செய்க.

(05 புள்ளிகள்)

ஆ) சார்பெழுத்து குறித்த நன்னூலாரின் கருத்துக்களைக் குறிப்பிட்டு, அவற்றின் தற்காலப் பொருத்தப்பாட்டினை மதிப்பிடுக. (15 புள்ளிகள்)

3) தமிழில் மொழிக்கு முதலில் வரும் எழுத்துக்கள் குறித்து நன்னூல் கூறுவனவற்றை விளக்கி, அவற்றின் தற்காலப் பொருத்தப்பாட்டினை மதிப்பிடுக. (20 புள்ளிகள்)

4) அ) 'பதம்' என்றால் என்ன? அதன் வகைகள் யாவை? (05 புள்ளிகள்)

ஆ) தமிழ்ச் சொல்லாக்கத்தில் 'விகுதி' பெறும் முக்கியத்துவத்தை விளக்குக

(15 புள்ளிகள்)

### பகுதி – II

5) அ) பெயர்ச்சொற்கள் குறித்து நன்னூல் கூறும் வரைவிலக்கணம் யாது?

(05புள்ளிகள்)

ஆ) நன்னூல், திணை அடிப்படையில் வகுத்துள்ள பெயர்ச்சொற்களின் வகைகள் யாவை?

(15 புள்ளிகள்)

24

6) நன்னூலார் கூறும் இடைச்சொற்கள் தற்கால வழக்கில் முற்றிலும் பொருத்தப்பாடு உடையன என்று நீர் கருதுகின்றீரா? மதிப்பிடுக.

(20 புள்ளிகள்)

7) "பெயர் வினைகளின் பண்பை உணர்த்தி அவற்றிற்கு உரிமை பூண்டு நிற்பன உரிச் சொற்களாகும்" - நன்னூலார் குறிப்பிடும் உரிச் சொற்களின் பல்வகைப்பட்ட பண்புகளையும் எடுத்துக்காட்டுக.

(20 புள்ளிகள்)

8) பின்வருவனவற்றுள் எவையேனும் **இரண்டிற்கு** குறிப்புரை எழுதுக.

அ) தமிழில் மொழிக்கு இறுதியில் வரும் எழுத்துக்கள்
ஆ) உயிர் எழுத்துக்களின் பிறப்பு
இ) பால் ரீதியான வினைமுற்றுக்கள்
ஈ) தொகைநிலைத் தொடர்மொழிகளின் தற்காலப் பொருத்தப்பாடு

(10x2 = 20 புள்ளிகள்)

*********************************************************************